# தமிழர் வாழ்வியலில் இல்லறமும் வீடுபேறும்

**மு. ரமேஷ் குமார்[1] & முனைவர் பொ. சுரேஷ்[2]**

**[1]முனைவர் பட்ட ஆய்வாளர் & [2]ஆய்வு நெறியாளர்**

**மெய்யியல் துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.**

**lakshmivarthana@gmail.com ,munaivarsuresh@gmail.com**

32

**ஆய்வுச் சுருக்கம்**

மனிதன் தன் வாழ்வில் அடைய வேண்டிய பயன்கள் நான்காகும். அவை அறம், பொருள், இன்பம், வீடு என்பனவாகும். இதனை முறையாக அறிந்து பயன் அடைவதற்கு நூல்களைப் படிக்கின்றோம். உலக வாழ்க்கையில் நாம் அனைவரும் எளிதில் அறிந்து அனுபவிக்க கூடியவையாக இருப்பவை அறம், பொருள், இன்பம் என்னும் மூன்றுமாகும். தனக்கும் பிறர்க்கும் தீங்கு வராமல் நன்மை தரும் வழியில் நடந்து கொள்வதே அறமாகும். இவ்வாறு அறவழி நின்று பொருள் சேர்த்தலும் அறவழியில் நின்று இன்பம் துய்த்தலும் அறநெறியாகும். இதனை,

"ஒழுக்கம், அன்பு , அருள், ஆசாரம், உபசாரம், உறவு, சீலம்
வழுக்கிலாத்தவம், தானங்கள், வந்தித்தல், வணங்கல், வாய்மை,
அழுக்கில்லாத் துறவு, அடக்கம், அறிவோடு அர்ச்சித்தல், ஆதி
இழுக்கிலா அறங்கள் ஆனால் இரங்குவான் பணிய றங்கன் " 1

என்று அறங்களைத் தெளிவுபடுத்துகிறார் அருணந்தி சிவாச்சாரியார்.

இல்லறத்தில் நல்லறத்துடன் வாழ்வதன் மூலம் வீடுபேறு அடையலாம் என்பது தமிழரின் உயர்ந்த கொள்கையாகும். கணவனும் மனைவியுமாக இல்லத்தில் இருந்து இல்லறம் என்னும் நல்லறத்தினைச் சிறப்புற நிகழ்த்தும் கடமையினை மேற்கொண்டு உயிரினும் சிறந்த முதற் பொருளாகிய செம்பொருளின் அருளியல்பினை உணர்ந்தோரிடம் கேட்டுணர்ந்து, ஒரு நெறியை மனதிற்கொண்டு, போற்றி மகிழ்தலே அவ்விருவரும் இதுகாறும் அன்பினால் நிகழ்த்திய மண வாழ்வின் முடிந்த பயனாகும் என்பது ஆசிரியர் தொல்காப்பியனார் அறிவுறுத்தியருளிய கொள்கையாகும். நம் முன்னோர் வீடு பேற்று நெறி பற்றிய கருத்துகளை,

"காமஞ் சான்ற கடைக்கோட் காலை
ஏமஞ் சான்ற மக்களோடு துவன்றி
அறம்புரி சுற்றமொடு கிழவனுங் கிழத்தியுஞ்
சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே" 2

என்னும் தொல்காப்பியப் பாடலால் புலனாகும். முற்றும் துறந்த துறவிகள் வீடு பேற்றை அடைவது போல இல்லறத்தில் செம்மையாக வாழ்வதன் மூலம் வீடுபேற்றைப் பெறலாம் என்னும் உயரிய கருத்துக்களை எடுத்துக்காட்டுவதாக இக்கட்டுரை அமைகிறது.

**திறவுச்சொற்கள்**

அறம், இல்லறம், துறவறம், வீடுபேறு, பண்பாடு, மக்கட்செல்வம்.

**முன்னுரை**

தொன்றுதொட்டு மனிதர் வாழ்விலும் பண்பாட்டிலும் இரண்டறக் கலந்து விளங்குவது அறமாகும். உலகில் தோன்றிய அனைத்து மதங்களும் அறக் கொள்கைகளையே வலியுறுத்துகின்றன. உலக உயிர்கள் அனைத்திலும் மேம்பட்ட பண்புடைய இனமாக மனித இனம் விளங்குவதற்கு மூல காரணமாக இருப்பது அறக்கோட்பாடுகளைப் பின்பற்றி வாழ்ந்து வருவதாகும். குறிப்பாகப் பண்டைத் தமிழர் தங்கள் வாழ்வில் அறத்திற்கு முதன்மையான இடம் அளித்து வாழ்ந்து வந்தனர். வாழ்வின் உயர்ந்த நோக்கமான வீடுபேறு அடைவதற்கு இல்லறமும் துறவறமும் சிறந்த நெறிகள் என்று உணர்ந்து வாழ்ந்தனர். குறிப்பாக இல்லறத்திற்கு முதன்மை அளித்தார்கள் என்பதை இலக்கியங்கள் மூலம் அறியமுடிகின்றது.

தமிழ் இலக்கியங்களில் அறம் என்ற சொல் ஒழுக்கம், உயர்ந்தோர் வழக்கு, நடுநிலைமை, நீதி, கடமை, ஈகை, புண்ணியம், அறக்கடவுள், சமயம் போன்ற பொருள்களில் வழங்கி வருவதைக் காண முடிகிறது.3 (திருநாவுக்கரசு க.த: 1977 : 24)

கழகத்தமிழகராதி இச்சொல்லுக்கு கடமை, நோன்பு, தருமம், கற்பு, இல்லறம், துறவறம், நல்வினை, அறநூல், அறக்கடவுள், தருமதேவதை, தீப்பயனுண்டாக்குஞ்சொல்.4 (கழக தமிழகராதி:59) ஆகிய பொருள்களில் அறம் என்னும் சொல்லைக் குறிக்கின்றன.

**இல்லறம்**

வாழ்க்கை முறையானது இல்லறம், துறவறம், தனி வாழ்க்கை என மூவகைப்படும். ஒரு கற்புடைய பெண்ணை மணந்து இல்லத்திலிருந்து அறஞ்செய்து வாழும் வாழ்க்கை இல்லறமாகும். உலகப்பற்றை ஒழித்து வீடுபேற்று முயற்சியில் ஈடுபடுவது துறவறமாகும். மணஞ்செய்யாது உலகப்பற்றோடு தனியாயிருப்பது தனி வாழ்க்கை ஆகும். இவற்றுள் இல்லறத்தையே சிறந்ததாகக் கொண்டனர் தமிழர்.

"அறத்தாற்றின் இல்வாழ்க்கை யாற்றின் புறத்தாற்றிற்
போஒய்ப் பெறுவ தெவன்" 5

அறத்தாறு என்பது அன்புடைமை, விருந்தோம்பல், இனியவை கூறல், செய்நன்றியறிதல், நடுநிலைமை, அடக்கமுடைமை, ஒழுக்கமுடைமை, பிறனில் விழையாமை, பொறையுடமை, அழுக்காறாமை, வெஃகாமை, புறங்கூறாமை, பயனில சொல்லாமை, தீவினையச்சம், ஒப்புரவறிதல், ஈகை என்னும் 16 பண்புகளால் இல்லறத்திலும் வீடு பேருண்டாம் என்பது தமிழர் கொள்கை. சிவனடியார் பலர் இல்லறத்தில் நின்றே வீடுபேறு பெற்றாரென்று பெரிய புராணம் கூறுகிறது.

“அறனெனப் பட்டதே யில்வாழ்க்கை யஃதும்
பிறன் பழிப்ப தில்லாயி னன்று" 6

இருவகை அறத்துள்ளும் அறம் என்று தமிழ் நூல்களால் சிறப்பித்து சொல்லப் பெற்றது இல்லறமே ஆகும். அந்த இல்லறமும் பிறரால் பழிக்கப்படாத தூய்மை உடையதாக இருத்தல் மிக நன்றாகும். பிறர் பழிக்கும் இவ்வாழ்க்கை என்பது விருந்தோம்பாமல் இருத்தல், பிறனில்விழைதல், வரைவின் மகளிர் தொடர்பு மற்றும் பிற காரணங்களால் நிகழ்வதாகும்.

**மக்கட் செல்வம்**

"ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்" 7

என்று இல்வாழ்க்கையில் நல்ல மக்களைப் பெற்ற தாய் தந்தையர் அடையும் இன்பத்தைப் பற்றித் திருவள்ளுவர் கூறுகின்றார்.

"பொன்னுடைய ரேனும் புகழுடைய ரேனுமற்
றென்னுடையரேனும் உடையரோ - இன்னடிசில்
புக்களையும் தாமரைக்கைப் பூநாறும் செய்யவாய்
மக்களையீங் கில்லா தவர் " 8

என்று மக்கட் செல்வத்தின் சிறப்பைப் புகழேந்தி புலவர் கூறுகிறார்.

**கற்பின் சிறப்பு**

"தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பொய்யெனப் என பெய்யும் மழை" 9

கணவனே கண்கண்ட தெய்வம் எனக்கொண்ட கற்புடைய மாதர் பெய் என்றால் மழை பெய்யும் என்று திட்பமாக கூறுகிறார் திருவள்ளுவர்.

"தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் பெருமழை என்றஅப்
பொய்யில் புலவன் பொருளுரை தேறாய் " 10

திருவள்ளுவர் பொய்யில் புலவர்; அவர் அருளிய நல்லுரை புனைந்துரையன்று பொருளுரையே என்று மணிமேகலை ஆசிரியர் கூறுகின்றார். மேற்கண்ட பாடல்கள் மூலம் கற்பின் சிறப்பை அறியமுடிகின்றது

**பசிப்பிணி போக்குதல்**

"பாத்துன் மரியி யவனைப் பசி என்னும்
தீப்பினை தீண்டல் அரிது " 11

இத்தகைய தன்மை வாய்ந்த தீப்பிணியை தீர்த்தல் தலையாய அறம் என்று திருக்குறள் கூறுகின்றது.

"ஆற்றுவா ராற்றால் பசியாற்றல் லப்பசியை
மாற்றுவா ராற்றலிற் பின்" 12

தவத்தால் வலிமை அடைந்தாரது வலிமையெல்லாம் தம்மை வருத்தும் பசியைப் பொறுத்துக்

கொள்ளுதலே ஆகும். அந்த வலிமையும் பொறுத்தற்கரிய பசியை ஈகையால் ஒழிப்பவரது வலிமைக்கு பிற்பட்டதே ஆகும் என வள்ளுவர் குறிப்பிடுகின்றார்.

" துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கு மிறந்தார்க்கு
மில்வாழ்வா னென்பான் துணை " 13

உலகப்பற்றைத் துறந்தவர்க்கும், உண்பதற்கில்லாத வறியவர்க்கும், ஒருவருமின்றித் தன்னிடம் வந்து இறந்தார்க்கும் (இறந்தார்க்குச் செய்யும் துணை ஈமக்கடனும் இறுதிச் சடங்கும் தென்புலத்தார் படையலும் ஆகும்). இல்லறத்தான் என்று சொல்லப்படுபவன் துணையாக உள்ளான்.

**முடிவுரை**

அன்பின் தூய்மை பெற்ற வளர்ச்சியே அதாவது பரிணாம வளர்ச்சியே அருள் நிலை அன்பு என்பது உயிர்களின் அடிப்படை இயல்பு 'அன்பே சிவம்' என்றும்' "Love is God" என்றும் உலகில் அனைவராலும் அது தெய்வீகப் பண்பாகப் போற்றப்படுகிறது. உடலுக்கும் உயிருக்கும் இடையே தொடர்பு ஏற்பட்டதற்கே அன்பு தான் காரணம் என்பார் திருவள்ளுவர். அதோடு பிறப்பிலிருந்து இறப்பு வரை நம் உயிரையும் உடலையும் பிரியாமல் இணைத்து வைத்திருப்பதும் அன்பு எனும் உணர்வே ஆகும். உடலின் ஒவ்வொரு அணுவிலும் அன்பின் ஆற்றல் உள்ளது.

"அன்போடு இயைந்த வழக்கென்ப ஆருயிர்க்கு
என்போடு இயைந்த தொடர்பு " 14

அன்பு என்ற உயிரின் அடிப்படை உணர்வைத் தூய்மை செய்து தான் ஆற்றல் மிக்க அருள் உணர்வைப் பெற முடியும். எனவேதான் அருளை, 'அருளெனும் அன்பீன் குழவி' அதாவது அருள் என்னும் அன்பு ஈன்ற குழந்தை என்று விளக்கம் தருகிறார். குழந்தை என்றாலே திருவள்ளுவர் கோட்பாட்டின்படி 'தம்மிற்தம் மக்கள் அறிவுடைமை' என்ற இலக்கணப்படி அது பெற்றோரை விட மேம்பட்டதாய் இருக்க வேண்டும் என்பது குறிப்பாகிறது. அதன்படி அருள் உணர்வு, அன்பை விட மேன்மையானது என்பது சொல்லாமலே விளங்கும்.

அன்பின் வழியே வாழ்வை தொடங்கி, இல் வாழ்வின் இன்ப துன்பங்களை சுவைக்கும் போது அற்றம் காக்கும் கருவியாகிய அறிவின் துணை கொண்டு அறத்தின் விளைவையும் மறத்தின் விளைவையும் பகுத்தறிந்து கொள்ள வேண்டும். அதன்படி அறத்திற்கு மட்டுமே துணை நிற்குமாறு மனத்தை பக்குவப்படுத்தும்போது மனத்துக்கண் மாசிலனாகிறோம். 'மனத்துக்கண் மாசிலானதால் அனைத்தறன்' என்பது திருவள்ளுவர் வாக்காகும்.

அந்த மனத்தூய்மை இயல்பான துறவு நிலைக்கு நம்மை இட்டுச் செல்லும். துறவு ஒழுக்கம் வளரும் போது அன்பு உணர்வு ஆற்றல் மிக்க அருளுணர்வாக நம்மிடம் ஒளிரத் தொடங்கும். அத்தகைய அறவோரை, 'இருமை வகை தெரிந்து ஈண்டு அறம் பூண்டார்' என்று பாராட்டியுள்ளார் திருவள்ளுவர். பொதுவாய் அன்பு, நீரின் குளிர்ச்சி (தண்மை) கொண்டது. அறிவு, நெருப்பின் செம்மைப் பண்பு கொண்டது. அறிவு என்ற செம்மையால் அன்பு என்ற தண்மையைக் காய்ச்சிப்

பக்குவம் செய்ய, செந்தண்மை என்ற அருள் வாய்க்கின்றது.

"அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுக லான்" 15

என்பது திருவள்ளுவர் வாக்காகும் மேற்கண்ட கருத்துக்களின் மூலம் இல்லறத்தினை செம்மையாக மேற்கொண்டால் மெய் உணர்வு பெற்று வீடுபேற்றை அடைய முடியும் என்பதை மேற்கண்ட சான்றுகளின் வழி அறியலாம்.

**மேற்கோள்கள்:-**

1. சிவஞானசித்தியார், பக்கம், 270ம் பாடல்
2. தொல்.பொருள். கற்பியல் (சூ 51)
3. முனைவர் சு.மாதவன், தமிழ் அற இலக்கியங்களும் பௌத்த சமண அறங்களும் ப.40
4. மேலது ப. 40
5. குறள் - 46
6. குறள் - 49
7. குறள் - 69
8. நளவெண்பா. கலித்தொடர் - 68
9. குறள் - 227
10. மணிமேகலை 22 - 60
11. குறள் - 227
12. குறள் - 225
13. குறள் - 42
14. குறள் - 73
15. குறள் - 30

**துணை நூல் பட்டியல் :-**

1. கனகசுப்புரத்தினம். ராம திருக்குறள் கேட்டதும்கிடைத்ததும், கற்பகம் புத்தகலாயம் 4/2 சுந்தரம் தெரு தியாகராய நகர், சென்னை- 17, மூன்றாம்பாதிப்பு - மே 2018
2. சண்முக தேசிக ஸ்ரீலஸ்ரீ ஞானசம்பந்த பரமாச்சரிய சுவாமிகள், திருவருட்செய்தி தொகுதி 2 மாணிக்கவாசகர் பதிப்பகம், 31 சிங்கர் தெரு பரிமுனை சென்னை – 18, முதற்பதிப்பு - 2007
3. சேதுப்பிள்ளை ரா.பி, வழிவழி வள்ளுவர், பழனியப்பா பிரதர்ஸ், 25 பீட்டர் ரோடு, சென்னை -14, பதினோராம்பதிப்பு-2009
4. தேவநேயப் பாவாணர். ஞா.மொழி ஞாயிறு, தொகுதி 11, உரை விளக்கவியல், தலைவர் உலகத் தமிழ்க்கழகம், பால விநாயகர் அச்சகம், 57 நேரு சாலை, சிவகாசி -626 123, முதல் பதிப்பு -2023
5. தேவநேயப் பாவாணர். ஞா. மொழி ஞாயிறு, தொகுதி 19, பண்பாட்டாய்வியல்,

தலைவர் உலகத் தமிழ்க் கழகம், பால விநாயகர் அச்சகம், 57 நேரு சாலை, சிவகாசி -626 123, முதல் பதிப்பு -2023

6. மாதவன் சு. முனைவர் தமிழ் அற இலக்கியங்களும் பௌத்த சமண அறங்களும், நியூசெஞ்சுரி புக்ஹவுஸ்பிரைவேட் லிமிடெட், சிட்கோ எஸ்டேட், அம்பத்தூர், சென்னை -98, முதற் பதிப்பு -2017

7.வெள்ளை வாரணனார் க.பேராசிரியர், சைவ சித்தாந்த சாத்திர வரலாறு பாகம் 1 மாணவர் பதிப்பகம், 20 / 33 பி3 பாண்டியன் அடுக்ககம் சீனிவாசன் நகர், சென்னை -17, மறுப்பதிப்பு -2017